Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National TAMIL DAILY

தேசிய தினசரி

போன் 389

தபாற் பெட்டி எண் 49

மலர் 3 | யாழ்ப்பாணம், பிலவ ஆவணி 24 ஆம் நாள் | ரவி அவ்வல் 28 | (9-9 61) | சனிக்கிழமை | இதழ் 178

நீங்கள் அணியும் ஆடைகள
தூய வெண்மையாகத் திகழவேண்டுமாளுல்
இன்றே!

டொலர் அடையாளமிட்ட
நீலம் வாங்கி உபயோகியுங்கள்

விநியோகஸ்தர்கள்:

டொலர் கோப்பரேஷன்

14, டார் வீதி, கொழும்பு.

## தடுப்புக் காவலில் இருக்கும்

# ஆசிரியருக்கு 5 மாதம்

# சம்பளம் இல்லை

## செனட் சபையில் திரு. நல்லையா புகார்

### கவனிப்பதாக மந்திரி வாக்குறுதி

கொழும்பு வெள்ளி

இன்று செனட்சபை திரு. சிரில் டி' சொய்ஸா த மையில் கூடியபோது தடுப்புக்காவலிலிருக்கும் திருக் கோணமலை ஸ்ரீ சண்முகவித்தியால யத்தைச் சேர்ந்த திரு. சிவகுருவுக்கு கல்வி இலாகா 5 மாதங்களாகச் சம்பளம் வழங்கவில்லை என்ற விஷயத்தை செனட்டர் ஜி. நல்லையா பிரஸ்தாபித்தார்.

"திரு. சிவகுரு, மனைவியையும், 7 பிள்ளைகளையும் காப்பாற்ற வேண்டியவராயிருக்கிறார்.

இதுசம்பந்தமாக திரு. சிவகுரு கல்வி இலாகாவுக்கும், கல்வி மந்திரியின் நிரந்தரக் காரியதரிசி, பாதுகாப்பு வெளிவிவகார மந்திரியின் பாராளுமன்றக் காரியதரிசி, கவர்னர் ஜெனரல் ஆகியோருக்குக் கடிதங்கள் எழுதினர். ஆனல் இதுவரை எவ்விதபதிலும் இல்லை. அவரது மனைவியும் குழந்தைகளும் படும் கஷ்டத்தை அரசாங்கம் உணர்ந்து உடனடியாக அவரது சம்பளத்தை வழங்க அவசியமான ஏற்பாட்டைச் செய்யுமென நம்புகிறேன்" என்றும் செனட்டர் நல்லையா குறிப்பிட்டார்.

சபை முதல்வர் செனட்டர் ஜயசூரியா இதற்குப் பதிலளிக்கையில், கல்வி அமைச்சின் கவனத்திற்கு இவ்விஷயத்தைக் கொண்டுவருவதாய்க் கூறினர்.

செனட், இம்மாதம் 12-ம் தேதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

## இலங்கைக்கு அமெரிக்க உதவி தொடர்ந்து! கிடைக்கும்

### ஜனதிபதி கென்னடி அறிவிப்பு

வாஷிங்டன், செப். 8

அமெரிக்காவில் இலங்கையின் புதிய ஸ்தானிகராக நியமிக்கப்பட்ட திரு. டபிள்யு கோபல்லவா நேற்று வெள்ளை மாளிகையில் ஜனதிபதி கென்னடியிடம் தமது நியமனப் பத்திரங்களைத் தாக்கல்செய்தார்.

இலங்கைப் பிரதம மந்திரி திருமதி சிறிமா பண்டாரநாயக்காவிடமிருந்தும் கவர்னர் ஜெனரல் சேர். ஒலிவர்குணதிலக்கா ஆகியோரிடமிருந்தும் ஜனதிபதிக்கு நல் வாழ்த்துக்களைத் தாம் கொண்டுவந்திருப்பதாக திரு. கோபல்லவா தெரிவித்தார்

உலகப் பிரச்னைகளை உண்மையான, நம்பிக்கையான பேச்சுவார்த்தைகள்மூலம் தீர்த்துக்கொள்ளலாமென்பதுதான் அமெரிக்காவின் நம்பிக்கை என்று ஜனதிபதி கென்னடி கூறினர்.

நிரந்தரமான சமாதானம் நிலவவேண்டுமென்பதும் நிரந்தரமான சமாதானம் நிலவினுல் தான் மக்களின் வாழ்க்கைத் தரம் உயரும் என்பதும் அமெரிக்காவின் நம்பிக்கை என்று ஜனதிபதி தெரிவித்தார். பலாத்கார ஆட்சிக்குப் பதில் உலகில் சட்டபூர்வமான ஆட்சியை ஏற்படுத்துவதுதான் அமெரிக்காவின் கொள்கையென்றும் ஜனதிபதி கென்னடி கூறினர்.

இலங்கைக்கு தொடர்ந்து அமெரிக்கா உதவியளித்துவருமென்றும் ஜனதிபதி அறிவித்தார்.

## பிரபல சைக்கிள் ஓட்டம்

நாவலப்பிட்டி, வெள்ளி

சைக்கிள் ஓட்ட வீரரான எஸ். எம் ராமக்கிளி இன்று காலை 9 மணிக்கு புதிய சாதனை ஒன்றை நிகழ்த்தும் பொருட்டு சைக்கிளில் ஏறினர். ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிவரை சவாரி செய்யப்போவதாக அவர் கூறினர். சைக்கிளை நிறுத்தாமல் அதிலேயே தூங்கி, குளித்து, சாப்பிட்டு, உடை உடுத்துவதாயும் அவர் கூறினர்.

நாவலப்பிட்டி நகரசபை தலைவர் திரு டி. பி ரணசிங்க ஏராளமான கூட்டத்தினருக்கு மத்தியில் இந்த சைக்கிளோட்டத்தைஆரம்பித்துவைத்தார்.

## சாகித்திய தினம்

கொழும்பு, வெள்ளி

நாளை நாடெங்கும் 3 வது சாகித்திய தினம் கொண்டாடப்படும் இதற்காக விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

## ராஜமகாவிகாரையில் பொலிஸ் முஸ்தீபு

### கைகலப்பு ஏற்படுமென்ற அச்சமே காரணம்?

கொழும்பு, வெள்ளி

இன்றுகாலை களனி ராஜமகாவிகாரையைச் சுற்றி கண்ணீர்ப்புகை பொலிஸ் கோஷ்டி ஒன்று நிறுத்தப்பட்டது. தர்மகர்த்தாசபைக்கூட்டம் நடைபெறுவதை முன்னிட்டு இரு எதிர்க்கோஷ்டிகளுக் கிடையே கைகலப்பு ஏற்படுமென்ற அச்சமே இதற்குக்காரணம். தர்மகர்த்தாவான சோமரத்ன, நிர்வாகம் சம்பந்தமாக செய்துள்ள ஏற்பாடுகளைச் சபையின் ஒரு பிரிவினர் ஆட்சேபிக்கின்றனர். ஐக்கியதேசியக் கட்சியை ஆதரிப்பவர்களும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஆதரிப்பவர்களும் தர்மகர்த்தா சபையில் இருக்கிருர்கள்.

## அரசாங்க ஊழியர் ஆட்சேபம்

கொழும்பு, வெள்ளி

55 வயதில் கட்டாயம் ஓய்வு பெறவேண்டுமென்ற பொக்கிஷ இலாகாவின் முடிவை அரசாங்க ஊழியர்கள் ஆட்சேபித்துள்ளனர்.

## தூதுகோஷ்டிகள்

கொழும்பு, வெள்ளி

7 பேரடங்கிய பிரேஸில் வர்த்தகத் தூதுகோஷ்டி ஒன்று நாளை இலங்கை வரவிருக்கிறது.

இன்று 2 பேரடங்கிய நல்லெண்ணத் தூதுகோஷ்டி ஒன்று குவாய்த்திலிருந்து இலங்கை வந்தது

## சகல ஆசிரியர்களுக்கும் ஒரே தொழிற்சங்கம்

### தொழிற் சட்டத்தைத் திருத்த மந்திரிக்கு மகஜர்

கொழும்பு, வெள்ளி

அரசாங்கப் பாடசாலைகளிலும் தனிப்பட்ட பாடசாலைகளிலும் உள்ள ஆசிரியர்களுக்கு ஒரே தொழிற்சங்கத்தை நிறுவுவதற்கேற்ற வகையில் தொழிற்சங்க சட்டத்தை திருத்துமாறு அகில இலங்கை ஆசிரியர் சங்கம் தற்காலிக தொழில் மந்திரியைக் கேட்டிருக்கிறது.

சங்கத்தின் பொதுக் காரியதரிசி திரு. ஜே. டி. ஆசீர்வாதத்தினுல் மந்திரிக்கு அனுப்பப்பட்டுள்ள மகஜரில் சகல ஆசிரியர்களையும் கொண்ட ஒரு பலமான தொழிற்சங்கம் இந்நாட்டின் கல்விக் கொள்கையை உருவாக்குவதற்கு உதவியாய் இருக்குமெனக் கூறப்பட்டுள்ளது.

## புதிய தாக்குதல்

லண்டன், செப். 8

அங்கோலாவில் தேசியவாதிகள் கடுமையான முறையில் புதிய தாக்குதல்களை ஆரம்பித்துள்ளதாக ஒரு செய்தி கூறுகிறது.

கொழும்பு, வெள்ளி

மோட்டார் கார்களைப்பொருத்துவதற்கான பர்மிட்டுகள் பிரபலமான 5 இலங்கையர் கம்பெனிகளுக்குக் கொடுக்கப்படவிருக்கின்றன. டட்ஸன், பியட், ஸ்கோடா, ரெனல்ட், ஸ்டாண்டர்ட் கார்களின் ஏஜன்டுகளுக்கே பர்மிட்டுகள் கொடுக்கப்படவிருக்கின்றன.

## 55 வயதில் ஓய்வுபெறும் விதியை ஆட்சேபிக்க...

### கொழும்பு ஆசிரியர் சங்கம் முடிவு

கொழும்பு, வெள்ளி

55 வயதில் ஓய்வுபெறவேண்டுமென்ற விதியை ஆட்சேபிப்பதென, நேற்றுக்கூடிய கொழும்பு ஆசிரியர் சங்கத்தின் கமிட்டிக்கூட்டம் முடிவுசெய்தது. இந்த விதியினுல் அநேக ஆசிரியர்களுக்கு அதிகப்படி பென்ஷன் கிடைக்காது எனவும் தற்போதைய சட்டத்தின்படி அதிகப்படியான பென்ஷன் பெறுவதாளுல் 38 வருடம் சேவை செய்திருக்கவேண்டுமென்றும் எனவே ஆசிரியர்கள் இதனுல் பாதிக்கப்படுவார்கள் என்றும் கூறப்பட்டது.

## இலங்கை-இந்திய குத்துச்சண்டை போட்டி

கொழும்பு, வெள்ளி

எம். டி. குணசேன கேடயத்திற்கான இலங்கை-இந்திய பாடசாலை குத்துச்சண்டைப் போட்டிகள் வருகிற 25 ம் தேதி நடைபெறவிருக்கிறது.

## வருமானவரி கட்டாமல் நாட்டை விட்டு செல்லவிருந்த பிரமுகர்கள்

### ரூ. 11 லட்சம் கட்டும் வரை தடை விதிக்கப்பட்டனர்

கொழும்பு. வெள்ளி

வருமானவரி இலாகா செய்துகொண்ட ஒரு முறையீட்டின் பேரில் கொழும்பு பிரதம மாஜிஸ்ட்ரேட் திரு என். ஏ. டி. ஈ. எஸ். விஜயசேகரா நாட்டைவிட்டுச் செல்லவிருந்த சர் டொனேஷியஸ் விக்டோரியா, அவரது புதல்வர் திரு. ஜே. எஸ். விக்டோரியா ஆகிய இருவருக்கும் இன்று காலை தடைவிதித்தார்.

ரூ. 5,61,375, ரூ. 5.48,455 ஆகிய இரு தொகைகளையும் அவர்களிடமிருந்து மீட்டும் வரை நாட்டைவிட்டுச் செல்லாமல் அவர்களைத் தடுக்குமாறு வருமானவரி இலாகாவைச் சேர்ந்த திரு. வி. கே. டி. எஸ். ஜெயசூரியா இன்று காலை பிரதம மாஜிஸ்ட்ரேட்டிடம் விண்ணப்பித்ததைத் தொடர்ந்து இவ் வுத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

சர். டொனேஷியஸ் விக்டோரியாவும், அவரது புதல்வரும் இலங்கையை விட்டுச் செல்ல திட்டமிட்டிருந்ததாய் தமது இலாகாவுக்குத் தகவல் கிடைத்ததாய் திரு. ஜெயசூரியா அப்போது மாஜிஸ்ட்ரேட்டிடம் தெரிவித்தார்.

மணிவாக்கு

நாவை அடக்குதல் எல்லாத் தவங்களிலும் சிறந்தது —காந்திஜி

# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம பிலவ ஆண்டு ஆவணி மீ 24உ (9-9-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389.

## அதிக சிக்கலாக்க வேண்டாம்

பெல்கிரேட் மகாநாட்டின் போது இந்தியாப் பிரதமர் நேருஜி, இலங்கைப் பிரதமர் சிறிமா, இந்தியப் பாதுகாப்பு மந்திரி கிருஷ்ண மேனன் இவர்கள் சேர்ந்து சிற்றுண்டி சாப்பிடும் ஒரு படம் வெளியாயிற்று. அச் சமயம் இந்தியா—இலங்கைப் பிரச்சினைகளைப் பற்றி இவர்கள் பேசினார்களா, அப்படியாயின் என்ன பேசினார்கள் என்ற விபரங்கள் தெரியவில்லை. நுணுக்கமான விபரங்களைப்பற்றி இவர்கள் பேசியிருக்க முடியாதெனினும் இரு அரசாங்கப் பிரதிநிதிகளும் கூடி இப் பிரச்சினையைப்பற்றி வருகிற டிசம்பர் மாதம் பேச்சு வார்த்தைகள் நடத்தலாமென்று சொல்லப்படுகிறது. இரு அரசாங்கங்களும் சேர்ந்து பரஸ்பர அபிமான முறையில் இப் பிரச்சினையைக் கூடிய சீக்கிரத்தில் சமரசமாகத் தீர்ப்பது, சம்பந்தப்பட்ட சுமார் 8 லட்சம் மக்களுக்கும் பெரிய கஷ்ட நிவாரணமாக இருக்கும்.

1954ம் வருடம் நேரு-கொத்தலாவலை ஒப்பந்தத்துக்குப் பின் இரு அரசாங்கங்களுக்கும் இவ்விஷயமாகப் பேச்சுகள் நடக்கவில்லை. அந்த ஒப்பந்தத்தைச்சரிவர நிறைவேற்றவில்லை என்று இரு தரப்பினரும் பரஸ்பரம் குற்றம் சாட்டிக் கொண்டிருக்கின்றனர். இதற்கிடையே புதிய புதிய சட்டதிட்டங்கள் ஏற்பட்டு, சம்பந்தப்பட்ட மக்களின் சங்கடங்கள் அதிகரிக்கின்றன. தோட்டங்களிலோ அல்லது வேறிடங்களிலோ அம் மக்களுக்குப் புதிதாக வேலை கிடைப்பது குதிரைக் கொம்பு அரசியல் உரிமையற்ற அவர்களது நிலை, தோட்டப் பகுதிகளில் எவ்வளவு மோசமாக இருக்கிறதென்பதற்கு, லட்சுமி தோட்ட விசாரணையில் வெளியாகும் பல விபரங்களே போதிய அத்தாட்சியாகும். இந்த அவல நிலை நீங்கவேண்டுமாயின், அம் மக்களின் அரசியல் அந்தஸ்து திட்டவட்டமாகத் தீர்மானிக்கப்பட்டுவிட வேண்டும். இன்றேல் இலங்கையின் முன்னேற்றத்துக்கும் அரசியல் அமைதிக்கும் இது பாதகமாக முடியும்.

இதற்கிடையே 1954ம் வருடத்துக்குப்பின் இந்தியப் பிரஜைகளாகப் பதிவு செய்து கொள்கிறவர்களுக்கு விஸா வரி விதிப்பதில்லை என்று இலங்கை அரசாங்கம் ஒரு சட்டம் கொண்டுவரப்போவதாக அறிவித்துள்ளதாகலோகசபையில் தெரிவிக்கப் பெற்றது. நாடற்றவர்கள் தாங்களாக இந்தியப் பிரஜைகளாகப்பதிவு செய்து கொள்ளும்படி தூண்டவும், 1954ம் வருட ஒப்பந்தத்தை அமுலுக்குக் கொண்டு வரவும் இந் நடவடிக்கையை இலங்கை எடுத்துள்ளது போலும்.

ஆனல் டில்லி ஒப்பந்தப்படி, 55 வயது வரை இங்கு தொடர்ந்து தொழில் நடத்த அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுமென்று திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டது, அல்லது உத்தரவாதத்தைச் சட்டப்படி அளிக்காத வரை இந்தியர்களாகப் பதிவு செய்து கொண்டதும், இரண்டொரு வருடங்களில் நாடு கடத்தப்பட்டு விடலாமென்ற பீதி சம்மந்தப்பட்டவர்களுக்கு இருப்பது இயற்கை. அந்தப் பீதி நீக்கப்பட்டாலே, அவர்களில் சிலர் இந்தியர்களாகப் பதிவு செய்ய முன்வரலாம்.

இதே சமயம் இந்திய ஹைகமிஷனர் பாலகிருஷ்ண கபூர் நாளைக்கு தமிழ் நாட்டுக்குப் புறப்பட்டுச் சென்று அங்கு முதலமைச்சர் முதலியவர்களுடன், இப் பிரச்சினையைப் பற்றியும் சட்டவிரோத குடியேற்றத்தைத் தடுப்பது பற்றியும் பேசப்போகின்றார்.

இப் பிரச்சினை சுமுகமாகத் தீர சென்னை ராஜ்யத்தின் ஒத்துழைப்பும் பூரணமாக வேண்டும். டிசம்பரில் நடைபெறும் பேச்சுகள் வெற்றிபெற வேண்டுமாயின், சம்பந்தப்பட்ட எல்லாருடைய நல்லெண்ணமும் ஒத்துழைப்பும் தேவை. இதற்கிடையே பிரச்சினையை சிக்கலாக்கக் கூடிய எந்த நடவடிக்கைகளையும் இலங்கை அரசாங்கம் எடுக்கக் கூடாது. நாடற்றவர்களை அந்நியர்களாக தனி இடாப்பில் பதிவு செய்வதுடன், அவர்களும் அந்நியர்கள் போலவே அதிக வரிகள் செலுத்தி கடைகளைப் பதிவு செய்து கொள்ளவேண்டியிருப்பின், அது 1954ம் வருட ஒப்பந்தத்துக்கு மாமுவதுடன, பிரச்சினையை அதிக சிக்கலாக்கிவிடும். பிரச்சினையைச் சீக்கிரத்தில் தீர்க்க ஆவல் கொண்டுள்ள இலங்கை அரசாங்கம், இப் பிரச்சினையை அதிக சிக்கலாக்கிவிடும் நடவடிக்கையை எடுப்பது எவ்விதத்திலும் தகாது.

# “தனிப்பட்ட வர்த்தகர்களுடன் போட்டியிடும நோக்கமில்லை”

## அரசாங்கத்தின் கொள்கை பற்றி வர்த்தக மந்திரி

கொழும்பு, வெள்ளி

**மந்திரி திரு. டி. பி. இலங்கரத்ன இன்று பார்லிமெண்டில் பேசும்போது தனிப்பட்ட வர்த்தகர்களுடன் போட்டி போடுவது அரசாங்கத்தின் நோக்கமல்லவென்றும், பொது மக்களுக்கு மலிவான விலையில் பொருட்களை விற்பனை செய்வதே அரசாங்கத்தின் கொள்கையென்றும்கூறினர்.**

மந்திரி தொடர்ந்து கூறியதாவது:- “அரிசி, மாவு, மாசி போன்ற உணவுப் பொருட்களை அரசாங்கம் இறக்குமதி செய்கிறது. உருளைக்கிழங்கு, கொச்சிக்காய், வெங்காயம் போன்றவைகளை தனிப்பட்ட வர்த்தகர்கள் இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளனர். இப்படியான உணவுப் பொருட்கள் மக்களிடையே ஒழுங்காக கிடைக்கக்கூடியதாக இருக்கிறதா என்பதை அரசாங்கம் கவனித்துவருகிறது. இதன் காரணத்தினல்தான் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனமும் இவ் உணவுப்பொருட்களை இறக்குமதி செய்கிறது”

தீப்பெட்டி சம்பந்தமாக மந்திரி குறிப்பிடுகையில், இங்குள்ள 9 தீப்பெட்டி தொழிற்சாலைகளும் சரியான முறையில் உற்பத்தி செய்தால்,தீப்பெட்டி பற்றாக்குறைஏற்படாது என்றார்.

1962-ம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதியில் இருந்து இன்சூரன்ஸ் கார்ப்பரேஷன் வேலைகள் ஆரம்பமாகிவிடும். இன்சூரன்ஸ் சம்பந்தமானவைகளில் இந்திய நிபுணர் திரு. ராஜகோபாலன் தன்னல் இயன்ற அனைத்தையும் செய்துவருகிறார் என்றும் மந்திரி குறிப்பிட்டார்.

# காங்கேசந்துறை ஆஸ்பத்திரி வேறிடத்திற்கு மாறும்?

## உதவி சுகாதார மந்திரி ஆலோசனை

கொழும்பு, வெள்ளி

யாழ்ப்பாணப் பகுதிகளிலுள்ள ஆஸ்பத்திரிகளைத் திருத்தியமைப்பது சம்பந்தமாக சுகாதார மந்திரி திரு. ஒபயசேகரா, சுகாதார இலாகா அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினர்.

காங்கேசன்துறை, ஆஸ்பத்திரியை வேறிடத்துக்கு மாற்றியமைப்பது பற்றி மந்திரி ஆலோசித்து வருவதாயும் சிமிந்தித் தொழிற்சாலையிலிருந்து கழிவுப்பொருட்களும், தூசுக்களும் ஆஸ்பத்திரியின் சுகாதாரத்துக்குக் கேடுவிளைவிப்பதாய் இருக்கிறதென்றும் மந்திரி கருதுவதே இதற்குக் காரணம் என்றும் தெரிகிறது. யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் மார்பு சிகிச்சை யூனிட் ஒன்று இப்போதோ அல்லது இன்னும் கொஞ்ச காலத்திலோ நிரந்தரமாக அமைக்க வேண்டும் என்பது மந்திரியின் கருத்தாகும்.

## பஸ சேவையை விஸதரிக்கக் கோரிக்கை

ஊர்காவற்றுறை, வியாழன்

லைடன் தீவில் பஸ்சேவையை விஸ்தரித்து, நாரந்தனை - கரம்பொன் கிராமத்திற்கு ஊடாக பஸ் சேவையை ஆரம்பிக்க வேண்டும் என நாரந்தனைக் கிராமச்சங்கத் தலைவர் திரு. சு. கதிரித்தம்பி அரசாங்கத்தைக் கேட்டுள்ளார்.

## மாணவர்சங்க தலைவர்

கொழும்பு, வெள்ளி

திரு. கே. எம். பி. ராஜரத்தினவின் உண்ணாவிரதத்தின் போது ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டதற்காக வித்தியோதய சர்வகலாசாலை மாணவர்சங்கத் தலைவர் சரணசிரி தேரோவும், காரியதரிசி எல். வீரரத்தினவும் வெளியேற்றப் பட்டுள்ளனர்.

இரத்தினக் கம்பளம்

# ‘அச்சாப் பாண்’!

பதுமன்

பண்டத்தரிப்புப் பகுதி பலநோக்குக் கூட்டுறவு சமாஜம் அப்பகுதியிலுள்ள 21 பள்ளிக்கூடங்களுக்கு பணிஸ் விநியோகம் செய்து வருகின்றது. சுத்தமான முறையில் தயார் செய்யப்படும் இந்த பணிஸை பள்ளிக்கூடப் பிள்ளைகள் விரும்பி உண்கின்றனர் எனவும், தனிப்பட்டவர்கள் மீண்டும் இந்த பணிஸ் விநியோகத்தைப் பெறுவதற்கு முயற்சிகள் செய்வது அப்பகுதி மக்களிடையே மிகுந்த அதிருப்தியை ஏற்படுத்தி வருவதாகவும் தெரிகின்றது.

வடபகுதி வித்தியாதிகாரி, கூட்டுறவு உதவிக் கமிஷனர் ஆகியோரின் உதவியுடன் நிறுவப்பெற்ற சமாஜத்தின் பேக்கரி நல்லமுறையில் பாண் தயார் செய்து வருகின்றதென அப்பகுதியிலுள்ள அன்பர் ஒருவர் தெரிவித்தார். பதினறு அவுன்ஸ் நிறையுள்ள பாணை சமாஜம் முப்பது சதத்துக்கு மக்களுக்குக் கொடுக்கின்றதாம். அத்துடன் இப் பாண் சுகாதார முறைபபடி தயார் செய்யப்பெற்று வான் மூலம் விநியோகம் செய்யப் படுவதாகவும் அறிகின்றேன்.

### நல்ல முயற்சி

இது ஒரு நல்லமுயற்சி. கூட்டுறவு முறையில் வெற்றிகரமாக நடைபெற்றுவரும் ஒரு காரியத்துக்கு ஆபத்து உண்டாகக் கூடாது. தனிப்பட்டவர்கள் சுயநல நோக்கத்துடன் இந்தப் பாண் விற்பனைக்குக் குந்தகம் விளைப்பதை எவரும் விரும்பமாட்டார்கள். கூட்டுறவுப் பகுதியினர் இது விஷயத்தில் உஷாராக இருத்தல் அவசியமாகும்.

### ‘அச்சாப் பாண்’

பண்டத்தரிப்பிலே இருபத்தொரு பள்ளிக்கூடங்களில் பணிஸ் விநியோகம் செய்யப் படுவதைப் பற்றி ஆரம்பத்திற் குறிப்பிட்டிருந்தேனல்லவா? அப்பள்ளிக்கூடங்களிலுள்ள பிள்ளைகள் இந்த பணிஸை ஆசையுடன் உண்பதுவும் ‘அச்சாப்பாண்’ என்று சொல்லி அ[illegible] பற்றியும் எண்ணும் போது மகிழ்ச்சியாகவே இருக்கின்றது. அநேகமாக பள்ளிக்கூடங்களில் கொடுக்கப்படும் பணிஸைப் பிள்ளைகள் விரும்பி உண்பதில்லை. அவற்றை அப்படியே நாய்களுக்கும் காகங்களுக்கும் எறிந்து விடுவார்கள். சில சமயம் நாய்களே இந்த பணிஸை திரும்பியும் பார்ப்பதில்லை! இந்த அழகில் நல்ல பணிஸ் சில பிள்ளைகளுக்கேனும் கிடைத்து வருவது பெரியகாரியமாகும். இப்பணி தொடர்ந்து நடைபெற வேண்டுமென்பதற்காகவே இங்கு இதனைக் குறிப்பிடவேண்டியிருந்தது.

### தபால் தாமதம்

வேலை நிறுத்தமோ வேறு சங்கடங்களோ இப்போது தபாற் பகுதியைப் பாதிக்கவில்லை. அப்படியிருந்தும் சில இடங்களிலிருந்து அனுப்பப்படும் தபால் இரண்டு மூன்று தினங்கள் பிந்தியே சேருவதாகப் பலர் புகார் செய்கின்றனர். நிர்வாகச் சீர்கேடோ, அல்லது தபாற்காரர்களின் கவலையீனமோ, எதுவாக இருந்தாலும் தபாற் பகுதியினர் இதுவிஷயத்தில் மிகுந்த அக்கறையுடன் உழைக்க வேண்டியவர்களாகின்றனர்.

### திருடர்கள் துரதிர்ஷ்டம்

இந்த உலகத்தில் எல்லோரும் அதிர்ஷ்டசாலிகளாகப் பிறப்பதில்லை. திருடப் போவதென்றாலும் அதிர்ஷ்டம் வேண்டுமென்பார்கள். இதனை நிரூபிக்கும் வகையில் சமீபத்தில் லண்டலில் ஒரு சுவையான சம்பவம் நடைபெற்றிருக்கின்றது.

கேப்பிரிட்ஜ் அச்சுக்கூடத்தின் இரும்புப் பெட்டியில் 100 பவுண் இருப்பதை யறிந்த சிலர் அதனைக் களவாடச் சென்றனர்.

இரும்புப் பெட்டியைத் திறந்த போது உள்ளே குப்பை நிறைய இருந்ததாம். மிகுந்த சிரமப்பட்டுக் குப்பையை அப்புறப்படுத்திய பிறகுதான் அடியில பணம் இருப்பது தெரியவந்தது. திருடர்கள் அகப்பட்டதைச் சுருட்டிக் கொண்டு கம்பிநீட்டிவிட்டனர். சாக்கு நிறையத் தங்கக் கட்டிகள் இருந்ததை அவர்கள் அறியவில்லை.

## ஐயாறன் எழுதுவது

நேற்று ஓர் நண்பர் வந்து ‘இன்னொரு நல்ல செய்தி’ என்றார். கண்டியிலே இன்று நடைபெறும் ஸ்ரீலங்கா சாகித்திய சம்மேளனத்தில் தாம் எழுதிய “கண்ணீரும் தண்ணீரும்” என்ற சிறுகதைத் தொகுதிக்கு ரூ. 1000 பரிசு கிடைக்கவிருப்பதாகத் தமக்கு தகவலும் அழைப்பும் கிடைத்துள்ளதாகத் தெரிவித்தார். அவர்தான் அன்பர் டொமினிக் ஜீவா என்பவர்

இதுவரை தமிழ் நூலுக்கு இலங்கை சாகித்திய மண்டலம் பரிசெதுவும் கொடுத்ததல்லை. சென்றவருடம் அவ்விழாவுக்குச் சென்று நேரில் பார்த்த நான் இக்குறையையும் குறிப்பிட்டிருந்தேன். இம்முறை அக்குறையைத் தீர்க்க முன்வந்த சாகித்திய மண்டலத்தையும், பரிசுபெற்ற அன்பர் டொமினிக் ஜீவாவையும் பாராட்டுகின்றேன்.

* * *

ஜீவா அவர்களை, தங்கள் தொழில் என்ன? என்று கேட்டேன். அவர் சற்றும் தயங்காமல் ‘சலூன் தொழில்’ என்றார். இதைக்கேட்டதும், அவர் மீது எனக்கு இருந்த மதிப்பு பன்மடங்கு உயர்ந்தது. சலூன் தொழிலாளியான தமிழ் வாலிபரொருவர், சாகித்திய மண்டலத்தின் இலக்கியப் பரிசை முதல் முதலாகப் பெறுவது, இங்கு தொழிலாளர் சமூகத்துக்கே பெருமையளிப்பதாகும். பலபல தொழில் செய்பவர்களிடையே இவ்வித பல மாணிக்கங்கள் மறைந்திருப்பது பகிரங்க ரகசியம்.

ம. பொ. சி. அவர்கள் சென்னை ‘தமிழ் நாடு’ பத்திரிகையில் ஒரு கம்போசிட்டராக இருந்தவர். இன்று தமிழகத்தின் மாபெரும் தலைவராகியுள்ளதுடன், சிலம்புச் செல்வராகவும் திகழ்கின்றார்!

சலூன் தொழிலாளியான அன்பர் டொமினிக் ஜீவா, தாம் பெற்ற இந்த இலக்கியப் பரிசினல், சலூன் தொழிலாளரின் மதிப்பையும் உயர்த்திவிட்டார். அவர் நீடுழி வாழ்ந்து நல்ல இலக்கியத்தின் மூலம் மக்களுக்கு மேலான தொண்டுகள் மேன்மேலும் செய்ய வாழ்த்துகின்றேன்.

* * *

நேற்று நல்லூர் தேர் திருவிழாவில் பெருங் கூட்டம். ஆறுமுகக் கடவுள் அழகான தேரில் புறப்பட்டு, நிலைக்கு வரும் வரையில், மப்பும் மந்தாரமாகவே இருந்துதது. பக்தர்களை வெயில தாக்கவில்லை.

இது தற்செயலா? தெய்வச் செயலா! முருகன் மிகக் கருணையுள்ளவன் என்பது இதன் மூலம் எனக்கு ஊர்ஜிதமாயிறறு.

* * *

கொழும்பு கொச்சிக்கடை ஸ்ரீமான் தம்பையா முதலியார் சத்திரத்திலே நாளைஞாயிற்றுக் கிழமை காலை 7-30 முதல் 12 வரை, லட்சார்ச்சனை நடைபெறுவதாயும், வந்து தெய்வ பிரசாதம் பெறுமாறும் பேராசிரியர் எஸ். ஆர். துரைசாமி சாஸ்திரியார் அன்புடன் அழைப்புக் கடிதமொன்று அனுப்பியுள்ளார். அன்று உடல் இங்கிருப்பினும் உள்ளமெல்லாம் அங்குதான் இருக்கும்.

பேராசிரியர் இப்போது கொழும்பு ஸ்ரீராம கிருஷ்ண மடத்திலே சனி, ஞாயிற்றுக் கிழமைகளில், பகவத் கீதை பிரசங்கமாரி பொழிந்து வருவதாயும், மண்டபத்தில் உட்காரவும் இடமில்லை என்றும், நல்லூர் தேர் திருவிழாவுக்கு வந்துள்ள சுவாமி பிரேமாத்மானந்தா அவர்கள் தெரிவித்தார்கள். தாயுமானவரைப் பற்றி ஒரு இஸ்லாமியப் பெரியார் மிக அருமையாக அங்கு பேசினாராம்.

இதையெல்லாம் கேள்விப்பட்டதும், கொழும்பில் இல்லாதது எவ்வளவு நஷ்டம்

(6-ம் பக்கம் பார்க்க)

# பிரயாண வாரண்டுகளை பிறருக்கு கொடுப்பது குற்றம்

## பொலிசார் தீவிரமாக கண்காணிப்பார்கள்

கொழும்பு, வியாழன்

அரசாங்க ஊழியர்கள் தங்கள் ரயில், விமான வாரண்டுகளை அதிகாரம் பெருத நபர்களின் உபயோகத்துக்குக் கொடுப்பதைப் பொலிசார் தீவிரமாகக் கண்காணித்து வருகிருர்கள்.

சென்ற வாரம் இரத்மலானை விமான நிலயத்திலிருந்து புறப்படவிருந்த "சுந்தரதேவி" என்ற ஏயர்சிலோன் விமானத்தில் பிறருக்குரிய வாரண்டுகளை உபயோகித்து அமர்ந்திருந்த ஒரு இளந் தம்பதிகளை இரகசியப் பொலிசார் கீழே இறக்கிவிட்டனர். இத்தம்பதிகளை இறக்கிவிட்டு விமானம் புறப்பட்டுவிட்டது. இதுசம்பந்தமாக விசாரணை செய்யப்படவிருக்கிறது. நிர்வாகச் சட்டத்தின்கீழ் பிரயாண வாரண்டுகளை பிறருக்குக் கொடுப்பது வேலை நீக்கம் செய்யப்படுவதற்கேற்ற குற்றமாகும்.

---

## 9-ம் திகதி பல்கலைக் கழக உதைபந்தாட்டப் போட்டி

யாழ்ப்பாணம், வெள்ளி

இலங்கைப் பல்கலைக் கழக கால்பந்தாட்டக் கோஷ்டி, இம்மாதம் 9, 10-ம்திகதிகளில் இங்கு இரண்டு போட்டிகள் விளையாடும். இப்போட்டிகள் யாவும் யாழ்ப்பாண பொலிஸ் மைதானத்தில் நடைபெறும்.

பல்கலைக்கழக கோஷ்டியில் இடம் பெற்றவர்களின் பெயர்கள் வருமாறு;-வி. சுந்தரலிங்கம் (காபடன்), எம். கிருஷ்ணமூர்த்தி, கே. டி. ஐ. டி' சில்வா, டி. எவ், ருபசிங்கி, டி. மகேந்திரன், வி. குணசிங்கம், எஸ். உலகப்பிரகாசம், ஆர். கணேசலிங்கம், டி. ஒயிலம்குமாரன், ஏ. பி. சமரக்கோன், கே. குணராஜா.

ரிசேர்வ்: வி. ராஜேஸ்வரன், சி. செல்வரட்னம், கே. ராஜரட்னம்.

யாழ்ப்பாணக் கோஷ்டிக்கு பின்வருபவர்களில் இருந்து 11 பேர் தேர்ந்தெடுக்கப்படுவர்.- எஸ். கனட், எஸ்.சிறில், என். முத்துகுமாரன், ஆர். காசிநாதன், கே. நல்லவேலு, எஸ். எஸ். துரைராசா, ஜி. எதிர்வீரசிங்கி, எல். வின்செஸ்லோஸ், கே. கணேசசுந்தரம், எஸ். கே. பரமலிங்கம், எஸ். மகாலிங்கம், எம். பக்தசிலன். எஸ். கே. கணேசலிங்கம், எஸ். அல்போன்சஸ், எஸ். என் ஜே. அந்தோனிப்பிள்ளை, டி கே. மரியநாயகம், என். மைக்கல்டேசன், எம். சீவரத்தினம், திச ரணகொட ஹலன்கொட, டி. பி. பத்மநாதன், எஸ். பிலேந்திரன், வி. டி. சிவலிங்கம், பி. ரத்தினசிங்கம்.

எதிர்வரும் 9-ம் திகதி சனிக்கிழமை, பல்கலைக்கழக கால்பந்தாட்டக் கோஷ்டிக்கு, யாழ்பாணம் கால்பந்தாட்டச் சங்கம் ஒரு விருந்தொன்றை அளிக்கும். இவ்விருந்து வைபவத்திற்கு யாழ்ப்பாண கால்பந்தாட்ட சங்கத்தின் தலைவர் திரு. அரசுவால்டன் தலைமை வகிப்பார்.

## காரை செலுத்தி சிறுவனுக்கு மரணம் விளைவித்ததாய் வழக்கு

யாழ்ப்பாணம், வியாழன்

கைதடியைச் சேர்ந்த செல்லையா அருணைசலம் என்பவர் ஈ. என். 9476 என்ற இலக்கமுடைய காரை வேகமாகச் செலுத்தி திருநெல்வேலியைச் சேர்ந்த இளையதம்பி கந்தையா என்ற 5 வயதுப் பையனுக்கு மரணம் விளைவித்ததாக குற்றம் சாட்டப்பட்ட வழக்கு யாழ்ப்பாணமாஜிஸ்திரேட் திரு.அரசுவால்டன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

---

## ஐக்கியநாணய சங்க ஆண்டு விழா

அல்லைப்பிட்டி, வெள்ளி

அல்லைப்பிட்டி கிழக்கு ஐக்கியநாணய சங்கத்தின் 31-வது ஆண்டுவிழா சமீபத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் திரு. சி. அருளம்பலம், திரு வ. செல்லப்பெருமாள், திரு. சு. நடராசா ஆசிரியர் உட்பட இன்னும் பலர் சொற்பொழிவாற்றினர்.

புதுவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: திரு. சி. அருளம்பலம், உபதலைவர்: சி. நல்லையா, செயலாளர்: மு. அருணைசலம், உபசெயலாளர்: திரு. க. நல்லையா பொருளாளர்: திரு. வ. செல்லப்பெருமாள்.

---

பொன், செப். 8

மேற்கு ஜெர்மனியிலுள்ள சோவியத் ஸ்தானிகர் தமது அரசாங்கத்துடன் கலந்தாலோசனை செய்வதற்காக நேற்று மாஸ்கோவுக்குப் பிரயாணமானர்.

## திருப்பிச்சுட உத்தரவு

எலிஸபெத்வில்லி, செப் 8

கடாங்காவில் எந்த நிலைமையையும் சமாளிக்க ஐ. நா. படைகள் தயாராக இருக்கின்றன என்று ஐ. நா. அதிகாரிகள் தெரிவித்தனர். கடாங்கா துருப்புக்கள் ஐ. நா. துருப்புக்கள் மீது சுட்டால் திருப்பிச் சுடும்படி ஐ. நா. துருப்புகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக கடாங்காவிலுள்ள ஐ. நா. படைத் தளபதி பிரிகேடியர் ராஜா தெரிவித்தார்.

சென்ற புதன்கிழமை ஐ. நா. துருப்புகள் மீது கடாங்கா துருப்புகள் துப்பாக்கிப் பிரயோகம் செயததில் ஐ. நா. படையைச் சேர்ந்த நான்கு துருப்புக்கள் காயமடைந்தனர். 16 மோட்டார் வாகனங்கள் சேதமடைந்தன. இதற்கிடையில் எலிஸபெத்வில்லியில் கடாங்கா படையைப் பலப்படுத்துவதற்காக மேலும் மூன்னூறுதுருப்புக்கள் அனுப்பட்டுள்ளதாக கடாங்கா பாதுகாப்பு வெளிவிவகார மந்திரி திரு. மொனேங்கோ தெரிவித்தார்.

---

## கென்யா சுதந்திரம்

### தலைவர்கள் கோரிக்கை

நைரோபி, செப் 8

கென்யாவுக்கு சுதந்திரமளிப்பதற்கான திகதியை நிர்ணயிப்பது பற்றி, நைரோபியில் இப்பொழுது நடைபெறும் பேச்சைத் தொடர்ந்து லண்டனில் நடைபெறவிருக்கும் பேச்சுவார்த்தை நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று தேசிய யூனியன், ஜனநாயக யூனியன் ஆகிய கென்யாவின் இரு முக்கிய அரசியல் கட்சிகளும் கோரியுள்ளன. கென்யாவுக்குப் புதிய அரசியல் திட்டம் அமைப்பது பற்றியும் லண்டன் பேச்சுவார்த்தையின்போது விவாதிக்கப்பட வேண்டுமென்றும் இரு கட்சிகளும் கோரியுள்ளன.

நைரோபி பேச்சு வார்த்தைகளில் திரு. ஜோமோ கென்யாட்டாவும் கலந்து கொள்ள வேண்டுமென்று நேற்று இரு கட்சிப் பிரதிநிதிகளும் விடுத்த வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டதாகவும் இதனை ஆட்சேபித்து பிரதிநிதிகள் வெளிநடப்புச் செய்ததாகவும் கூறப்படுகிறது.

---

## ஆப்கன் நிராகரிப்பு

காபூல், செப். 8

பாகிஸ்தானும் ஆப்கானிஸ்தானும் ராஜீய உறவுகளைத் துண்டித்துக் கொண்டதால் ஆப்கானிஸ்தானில் பாகிஸ்தானின் நலன்களைப் பிரிட்டிஷ் ஸ்தானிகர் கவனித்துக்கொள்வார். என்று பாகிஸ்தான் தெரிவித்தது. பாகிஸ்தான் நலன்களைப் பிரிட்டன் கவனித்துக்கொள்ளுவதை ஆப்கானிஸ்தான் நிராகரித்துவிட்டது.

# அரசாங்க நடத்தையில் தொழிற்சங்கசம்மேளனம்அதிருப்தி

## நிதிமந்திரிக்கு மகஜர்

கொழும்பு, வியாழன்

"தொழிற்சங்கங்களுக்கு அரசாங்கம் அளித்த போலி வாக்குறுதிகள் எல்லாம் இப்போது அம்பலமாகிவிட்டன."

இவ்வாறு அரசாங்க சேவையாளர் தொழிற்சங்க சம்மேளனம் நிதிமந்திரிக்குச் சமர்ப்பித்த மகஜரில் குறிப்பிட்டுள்ளது.

சென்ற ஆண்டு செப்டம்பர் மாதம் அரசாங்க சேவையாளர் தொழிற்சங்க சம்மேளனம் அரசகரும மொழி பற்றி வெளியிட்ட மகஜர் பற்றி நிதி மந்திரியின் ஆலோசனை கேட்டிருந்தபோதும், வேறு பலதடவைகளில் அவர் கருத்துகளைக்கேட்டிருந்தபோதும்.நிதி மந்திரி மௌனம் சாதித்தாரென்த் தொழிற்சங்க சம்மேளனம் தெரிவித்துள்ளது. நேற்று முன்தினம் சம்மேளனம் நிதி மந்திரிக்குச் சமர்ப்பித்த மகஜரில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

இந்த அளவுக்கு ஒருசேவையாளரிடம் கடமையுணர்ச்சி அற்றிருப்பது வருத்தமளிக்கிறது. தொழிற் சங்கத்துக்கு உழைப்பதாகக் கூறும் அரசாங்கம் ஏமாற்றம் தரக்கூடிய வகையில் நடந்துகொள்கிறது. தொழிலாளர்-முதலாளி ஒற்றுமையை வலியுறுத்தும் அரசாங்கத்திலுள்ள அதிகாரி ஒருவரின் நடத்தை ஒன்றே அரசாங்கத்தின் போலி வேஷங்களை அம்பலப்படுத்தியுள்ளது.

அரசாங்கசேவையாளர்களது சேவைகள் பற்றி எம்முடன் கலந்தாலோசியாதும் பென்ஷன் சட்ட 48-ம் சட்டப்பிரிவில் மாற்றம் செய்துள்ளமை மிக மிகத் திருப்தியற்ற செயலாகும். புதிதாக விதித்துள்ள 48 எப் சட்டப்பிரிவை நாம் ஏற்றுக்கொள்ள முடியாதிருக்கிறது. இளைப்பாறும் காலத்துக்கு முன்னதாகவே இளைப்பாற வேண்டிய நியதி எமக்கு விதிக்கப்பட்டுள்ளதால் இளைப்பாறும்போது நஷ்டஈடு வழங்கவேண்டும் என்ற எமது கோரிக்கையை குறித்த சட்ட மாற்றம் அப்படியே நிராகரித்துள்ளது."

சம்பளத் திட்டங்களும் பிழையாகவுள்ளன என்று இம் மகஜரில் கூறப்பட்டுள்ளது

## ஜப்பானின் ஆட்சேபம்

### அமெரிக்கா பரிசீலனை

வாஷிங்டன், செப். 8

அணுஆயுதப் பரீட்சையை மீண்டும் ஆரம்பிக்கப் போவதாக அமெரிக்காவும் அறிவித்ததைத் தொடர்ந்து ஜப்பான் அரசாங்கம் அமெரிக்காவுக்கு கடுமையான ஆட்சேபத்தைத் தெரிவித்துள்ளது. ஜப்பானின் இந்த ஆட்சேபக் குறிப்பு வாஷிங்டனிலுள்ள ஜப்பானிய ஸ்தானிகர் மூலம் அமெரிக்க அரசாங்கத்திடம் சேர்ப்பிக்கப்பட்டது. ஜப்பானின் ஆட்சேபத்தை அமெரிக்கா பரிசீலனை செய்வதாய் இன்று அறிவிக்கப்பட்டது.

---

உதைபந்தாட்டம்

## பொலிசை ராணுவம் வென்றது

மன்னர், வெள்ளி

மன்னர்ப் பொலிசாருக்கும் இராணுவத்தினருக்கும் உதைபந்தாட்டப் போட்டியொன்று சென். சேவியர்ஸ்கல்லூரிவிளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இராணுவத்தினர் 5 கோல்கள் எடுத்து வெற்றியீட்டினர். பொலிஸ் படையினர் ஒரு கோல் மட்டுமே பெற்றனர். மத்தியஸ்தராக சேவியர் கடமையாற்றினர்.

---

## கேரளசட்டசபை தேர்தல்

### மாஜி மந்திரிக்கு வெற்றி

திருவனந்தபுரம், செப். 8

கேரள ராஜ்ய சட்டசபைக்கு நடைபெற்ற தேர்தலில் தலைச்சேரித் தொகுதியில் காங்கிரஸ் அபேட்சகர் திரு. குன்னிராமன் வெற்றிபெற்றதாக அறிவித்தது தவறு என்று தேர்தல் நீதிமன்றம் நேற்று அறிவித்தது. கேரள கம்யூனிஸ்ட் அரசாங்கத்தில் மந்திரியாகவிருந்த திரு. வி. கிருஷ்ணையர் இத்தேர்தல் முடிவை ஆட்சேபித்து மனுச்செய்திருந்தார்.

திரு. வி. கிருஷ்ணையரும் திரு. குன்னிராமனும் நேரடியாகப் போட்டியிட்ட இத்தேர்தலில் திரு குன்னிராமன் 23 வாக்குகளால் வெற்றி பெற்றதாக முடிவு வெளியிடப்பட்டது.

ஆட்சேப மனுவின் மீது நடைபெற்ற விசாரணையின் பின் கம்யூனிஸ்ட் கட்சி அபேட்சகரான திரு. வி. கிருஷ்ணையர் பத்து வாக்குகளால் வெற்றி பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.


ஞாபகப்படுத்துகிறோம்!



இன்றுடன்

எமது சேலை மலிவு விற்பனை முடிவடைகிறது!

இவ்வரிய சந்தர்ப்பத்தில் விரைந்து வந்து உங்களுக்குத் தேவையான சேலைகள்

ஹான்ட்லூம்ஸ் நூல், பட்டுச் சேலைகள் · மணிப்புரி · காஞ்சிபுரம் சேலைகள்

காஷ்மீர் பிறின்டெட் சேலைகள்

மற்றும் பலரக சேலைகளையும் வாங்குங்கள்

நினைவிருக்கட்டும்!

டயரும்ஸ்

மெயின் வீதி. யாழ்ப்பாணம்.

எந்த வித சேலைகள் வாங்கினாலும் ஒவ்வொரு சேலைக்கும் 10% வீதம் கழிவு உண்டு.

DAYARAMS
JAFFNA.

# மாணவர் மலர்

## இவர்களைப்பற்றி, ஆச்சரியப்படாதீர்கள்!

—"மகான்"—

குழந்தை எப்பொழுது தவழும்? எப்போது நடக்கும்? எப்போது புத்தகங்களை வாசிக்கும்! எப்போது அக்குழந்தைக்கு உலக அனுபவம் ஏற்படும்? என்பவற்றுக்கெல்லாம் விடையை நீங்களே கூறிவிடுவீர்கள் என்பதில் ஐயமில்லை. ஆனால் உலகப் பிரசித்தி பெற்ற விசித்திரக் குழந்தையைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? 1771-ம் ஆண்டில் ஜெர்மனி தேசத்தில் ஒரு குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு கிரிஸ்டியன் ஹெயின்கர் எனப் பெயரிட்டார்கள். தாய் வயிற்றிலிருந்து பிறந்த இரண்டொரு மணித்தியாலத்திலேயே அக்குழந்தை பேச ஆரம்பித்துவிட்டது! மூன்று வயதாக இருக்கும்போதே அக்குழந்தை பைபிளைத் தலை கீழாகப் படித்துவிட்டதாம்! அதுதவிர கிரீக், பிரெஞ்சு, லத்தீன் போன்ற மொழிகளில் பாண்டித்தியமும் பெற்றுவிட்டது. சரித்திரம், பூகோளம் போன்றவைகளிலும் தகுந்த அறிவு அக்குழந்தையிடம் காணப்பட்டதாம். ஆனாலும் அக்குழந்தை - ஒரு விசித்திரக் குழந்தையாக வாழவிரும்பாத காரணத்தினால், தனது நான்காவது வயதிலே இறந்துவிட்டது!

டீன்ஸ்விப்ட் என்ற பெயரைக் கொண்ட குழந்தை தனது மூன்றாவது வயதில் பைபிளில் எந்த அத்தியாயத்தையும் வேகமாகப்படிக்கும் திறமையைப் பெற்றிருந்தது! டாக்டர் ஜோன்சனும் இப்படித்தான். மூன்று வயதிலேயே படிக்க ஆரம்பித்தார். அவருடைய தாயார் அவர் கையிலே ஒரு பிரார்த்தனைப் புத்தகத்தைக் கொடுத்து, "படித்து வை" என்று கூறிவிட்டுப் போய்விடுவாராம். அவர் மேல் மாடிக்குச் செல்வதற்கு முன்னர் சிறுவன், ஜோன்சன், "அம்மா...... அம்மா..., படித்தாகிவிட்டது ஒப்பிக்கட்டுமா?" என்று கூக்குரலிடுவானாம்! எப்படி இருக்கிறது?

ஒரு காலத்தில் இங்கிலாந்தின் பிரதம மந்திரியாகவிருந்த டிஸ்ரேலி என்பவர், சிறு வயதிலேயே உலக இலக்கியங்களில் கரை கண்டிருந்தாராம். அவரின் நண்பர்களெல்லாம் அவரைப் பார்த்து "ஒரு சமயம் நீர் நூல்நிலையத்தில் தான் பிறந்தீரோ?" என்று கேலி செய்வார்களாம். இவர்களைப் போன்று பலர் சங்கீதத்திலும் இளம் வயதில் மேதைகளாகயிருந்திருக்கிறார்கள். ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த ஹேண்டல் என்பவர் ஐந்து வயதாயிருக்கும்போதே மெட்டுகள் இயற்றுவதிலும், 'ஆர்கன்' என்னும் வாத்தியம் வாசிப்பதிலும் பிரபலமாயிருந்தான். எகூதி மெனுகின் என்பவர் மூன்று வயதாக இருக்கும்போதே நன்றாகப் பிடில் வாசிப்பார். இப்போதும் இவர்தான் பிடில் வாசிப்பதில் மேதை என்று கருதப் படுகிறார்.

இதைப் போலவே தான் ட்டுமன் சபோர்டு என்ற கணித மேதையும் இருந்தார். எட்டு வயதாக இருக்கும்போது, ஒருவர் இவரை அணுகி, 365. 365. 365. 365. 365. 465-ஐ 365ஆல் பெருக்கினால் என்ன விடை கிடைக்கும் என்று கேட்டார். ஒரு நிமிஷத்துக்குள் அவர், 133, 491, 850, 208, 566, 925, 016, 658, 299 941, 583, 225!" என்று விடையளித்தார். சோதிக்க வந்தவர் வியப்பு மேலிட சிலையாகி விட்டாராம்.

இவற்றையெல்லாம் வாசித்ததும் இப்படியெல்லாம் குழந்தைகள் அதுவும் விசித்திர மூளை படைத்த குழந்தைகள் மத்தியில், நாம் மட்டும் எம் மாத்திரம் என்றுதானே நினைக்கிறீர்கள்? முயற்சி பண்ணுங்கள். அது திருவினையாகும்!

## தாயின் அன்பு

உலகத்து உயிர்களில், பாலூட்டிகளே (Mammals) மிக்க அன்போடு தம் குட்டிகளைப் பாதுகாத்து வருகின்றன. அத்தகைய பாலூட்டிகளில் மனிதரே மிக்க அன்புடன் தம் குழந்தைகளைக் காத்து வருகின்றனர் என்று இதுவரை எண்ணி வந்தோம். ஆனால் மக்கள் இனத்திலும் பார்க்கத் தன் குட்டியிடம் மிக்க அன்பு காட்டும் பாலூட்டியைப் பற்றிய செய்தி ஒன்று அண்மையில் கிடைத்துள்ளது. "ஸீ ஒட்டர்" (Sea otter) என்பது அதன் பெயர்.

இது ஆசிய ஐரோப்பிய வட பகுதிகளில் கடல்களுக்கருகில் வாழ்கின்றது. இதன் முக்கிய உணவு மீன்களே. மற்றக் கடல் வாழ் பாலூட்டிகளைப் போன்று தாய் ஒட்டரும் ஒரு சமயத்தில் ஒரு குட்டியேபோடும். குட்டி பிறந்த நேரத்தில் இருந்து ஓராண்டு முடியும் வரை, அதைத் தாய் விட்டுப் பிரியாது. தாய் தனது முதுகை நீரில் ஆழ்த்தி நீந்த, அதன் குட்டி தாயின் மார்பகத்தின் மீதே எப்பொழுதும் குடி கொண்டிருக்கும். அதே நிலையில் குட்டி பாலுண்டு உறங்குவதுடன், தாயின் முன்னம் கால்களால் எப்பொழுதும் அன்புடன் வருடப்பட்டுக் கொண்டேயிருக்கும். தாய் உணவு பெறுவதற்கென, தனது குட்டியை அவ்வப்பொழுது விட்டுப் பிரிவதுண்டு. ஆனால், ஒரே நிமிஷத்தில் திரும்பி வந்து தனது குட்டியை அணைத்துக்கொள்ளும்.

## வானம் நீலமாக இருப்பதேன்?

அந்த நாள் முதல் இந்த நாள் வரை வானம் மாறவில்லை என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். வானத்தின் நிறம்தான் என்ன என்று கேட்டால், பூ... இதுவும் ஒரு கேள்வியா?" என்றுதானே சொல்லுவீர்கள். வானத்தின் நிறம் நீலம்தான் என்பதை மறுக்கவில்லை. அதுபோல், வானத்தின் நிறம் நீலமில்லை அது கறுப்பு நிறமுடையது என்று வாதாடவும் தயாராகவில்லை.

வானத்தின் நிறம் ஏன் நீலமாகயிருக்கிறது என்று தான் உங்களைக் கேட்கும் கேள்வி. பதிலளிப்பீர்களா? நீலமாக இருக்கும் வானம் ஏன் வெள்ளையாக, பச்சையாக, சிவப்பாக, மஞ்சளாக இருக்கக் கூடாது என்பது பற்றிச் சிறிதளவாவது நீங்கள் சிந்தித்ததுண்டா? சிந்திப்பது அவ்வளவு கஷ்டமில்லையே. நீங்கள் அதிகம் சிந்திக்காதீர்கள், வானத்தின் நீலநிறத்துக்குரிய காரணத்தை இதோ தெரிந்து கொள்ளுங்கள்.

சூரிய வெளிச்சம் பல நிறங்களால் ஆனது. கருஊதா, ஊதா, நீலம், பச்சை, மஞ்சள், ஆரஞ்ச், சிவப்பு ஆகிய ஏழு நிறங்களும் கலந்ததுதான் சூரியனின் ஒளி. இவற்றில் ஊதாக் கதிர்களும், நீலக்கதிர்களும் மற்ற நிறக் கதிர்களை விட அலை நீளம் குறைவானவை. ஆகையினால் எளிதில் சிதறக் கூடியவை.


நம் உலகைச் சுற்றி ஓர் அடர்ந்த காற்று மண்டலம் இருக்கிறதல்லவா? அதில் நிறையத் தூசும், தண்ணீர்த் துளிகளும் உள்ளன. இவை சூரிய ஒளியிலுள்ள ஊதா, நீலக் கதிர்களைத் திருப்பிச் சிதறடிக்கின்றன. இவ்வாறு சிதறடிக்கப்பட்டவை வானமெங்கும் பரவுகின்றன. இதனால் தான் வானம் நமக்கு நீல நிறமாகக் காட்சி அளிக்கிறது. என்ன... அண்ணாந்தா, பார்க்கிறீர்கள்? விஷயம் இப்போது தெரிந்துவிட்டதே!

## குட்டி முயலின் தந்திரம்

—மா. இந்திராணி—

அன்று காட்டிலே ஒரே ஆரவாரம். வண்ணவிளக்குகளின் ஒளியும் காகிதப்பூ ஜோடனைகளும் கண்ணைப் பறித்தன. பட்டாசுகளின் சத்தம் விண்ணைத்துளைத்தது. மிருகங்கள் எல்லாம் புத்தாடை அணிந்து பூரிப்புடன் இருந்தன. அக்காட்டின் சிங்கராஜாவிற்கு அன்று பிறந்ததினமாக இருந்ததே இவ்வளவு ஆரவாரத்திற்கும் காரணம். அன்றுமாலை சிங்கராஜாவின் பிறந்ததினத்தை ஒட்டி மாபெரும் ஓட்டப் பந்தயம் ஒன்றிற்கு ஏற்பாடாகியிருந்தது. அந்த ஓட்டப் பந்தயத்தில் முதலிடம் பெறுபவற்கு விலையுயர்ந்த வெள்ளிக் கிண்ணமும் ருசிமிக்க பரிஸ் மிட்டாய்ப் பொட்டலமும் பரிசாக அளிக்கப்படும் என விளம்பரம் செய்யப்பட்டது. எவ்வாறுயினும் இந்த ஓட்டப் பந்தயத்தில் கலந்து வெற்றியீட்டி மிட்டாய்ப் பொட்டலம் பெறவேண்டுமென்ற ஆசை, ராஜா என்ற குட்டி முயலுக்கு ஏற்பட்டது.

அன்றுமாலை சிங்கராஜாவின் தலைமையில் ஓட்டப்பந்தயம் ஆரம்பமாயிற்று. காட்டிலுள்ள மிருகங்களெல்லாம் போட்டி மைதானத்தின் முன் திரளாகக் கூடிநின்று வேடிக்கை பார்த்தன. போட்டியில் யானைகள், புலிகள், ஓநாய்கள், நரிகள் எல்லாம் பங்குபற்ற வரிசையில் வந்துநின்றன. குட்டிமுயல் ராஜாவும் அவ்வரிசையில் நிற்பதைக் கண்ட மிருகங்கள் பெருத்த குரலில் கேலிசெய்தன. ராஜா ஆத்திரத்தோடு தீவிரமாக யோசனை செய்தது. கரடியார் விசில் ஊதியதும் மிருகங்கள் ஓட ஆரம்பித்தன. போட்டியில் காட்டை ஒருமுறை சுற்றி வர வேண்டும். காட்டின் மறு பகுதியை அடைந்ததும் ராஜா தனக்கண்மையில் வேகமாக ஓடிக்கொண்டிருந்த ஓநாயின் முதுகில் ஏறி அமர்ந்து கொண்டது. ஓட்டத்தில் கவனமாயிருந்த ஓநாய் சிறு முயலின் செய்கையைக் கவனிக்கவில்லை. பந்தய தூரத்தின் இறுதி இடம் நெருங்குவதைக் கண்ட ராஜா ஓநாயின் முதுகிலிருந்து கீழே குதித்து வேகமாக ஓடியது. மற்ற மிருகங்கள் வேகமாக ஓடியதால் களைத்துப்போய் மெதுவாக ஓடின. ராஜா ஒரே ஓட்டமாய் ஓடி முதலிடத்தைப் பெற்றது குட்டிமுயலின் குள்ளத்தைப் புரியாத மற்ற மிருகங்கள் அதன் திறமையை மெச்சின. விலங்குக் கூட்டங்களின் கரகோஷம் விண்ணைப் பிளந்தது. சிங்கராஜாவிடமிருந்து மிட்டாய் பொட்டலத்தையும் வெள்ளிக் கிண்ணத்தையும் குட்டிமுயல் ராஜா குதூகலத்துடன் பெற்றுக் கொண்டது.



கண்டம்விட்டுக் கண்டம்பாயும் குண்டுகளை விடுவதற்கு முன்னறிவித்தல் கொடுக்கும் ரடார் சாதனம்.

## மிருகக் காட்சிச் சாலையில்

### இந்தியப் பிராணிகள்

மேற்கு ஜெர்மனியிலுள்ள ஹாம்பர்க்கிற்கு விஜயம் செய்பவர்கள் கட்டாயம் அங்குள்ள மிருகக் காட்சிச் சாலைக்கு விஜயம் செய்யாமல் போகமாட்டார்கள். வெளிநாடுகளிலிருந்து அங்கு செல்பவர்களில் பெரும்பாலோர் ஆசிய நாட்டினர். ஹாகன்பர்க் என்ற பெயரே உலகப் பிரசித்தமானது. 50 ஆண்டுகளுக்கு முன்னமேயே ஹாகன்பர்க் என்பவர் கூண்டுகள் இல்லாத இந்த மிருகக்காட்சிச் சாலையை எற்டுத்தினார். உலகிற்கே உயிர் காட்சிசலையை எப்படி அமைக்க வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக இக் காட்சி சாலை விளங்கி வருகிறது.

1943 இல் உலகப் போரின் போது வீசப்பட்ட குண்டுகளால் இக்காட்சிச் சாலை பெரும் அளவுக்கு அழிக்கப் பட்டதென்றாலும் இப்போது இக்காட்சிச்சாலை நன்கு விஸ்தரிக்கப்பட்டு காண வருபவர்களை மகிழ்விப்பதாக இருக்கிறது. ஹாகன்பர்க் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் சொந்த நிதியைக் கொண்டு இக்காட்சிச் சாலையைப் பராமரித்து வருகின்றனர். தனிப்பட்டவர்களால் நடத்தப்பட்டு வந்த போதிலும் பொது மக்கள் எல்லாரும் வந்து காண அனுமதிக்கப்படுகின்றனர். இதில் சுமார் 12,000 பிராணிகள் இருக்கின்றன. இவைகளில் சில மிக அபூர்வமானவைகள். இக்காட்சிச்சாலையில் இந்தியாவைச் சேர்ந்த பிரயாணிகள் அநேகம் இடம் பெற்றிருக்கின்றன.

சுமார் 30 கொக்குகள் இந்தியாவிலிருந்து சமீபத்தில் அங்கு அனுப்பப்பட்டன, இவை பார்க்க வருபவர்களைக் கண்டு நாணிக் கொள்கின்றன. தாராளமாக இவை பழக இன்னும் சில நாட்கள் ஆகும். சென்ற ஆண்டு இந்தியாவிலிருந்து அனுப்பப்பட்ட கொக்குத் தம்பதிகள் முட்டையிட்டு குஞ்சு பொரித்துள்ளது. அஸ்ஸாமலிருந்து நேப்பாளி என்ற காண்டாமிருகம் அங்கு அனுப்பப்பட்டது. அங்குள்ள இந்திய யானைகள் மீது குழந்தைகள் ஏறிச் சவாரி செய்கிறார்கள். மான் வகைகள், வரிக்குதிரை வகைகள் முதலியவைகளும் இதில் இடம் பெற்றுள்ளன. புலிகள் வசிப்பதற்கான காடுகள் இச்சாலையில் உள்ளன. பல வகை மீன்கள் அபூர்வ பிராணிகள் சில ஆகியவை சமீப காலத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

## "ஐக்கிய இராச்சியம் வேண்டாம்"

கொழும்பு, வியாழன் சகல அரசாங்க உறவுகளிலும், 'ஐக்கிய இராச்சியம்' என்ற வார்த்தைப் பிரயோகத்தைத் தவிர்த்து, 'பிரிட்டன்', 'பிரிட்டிஷ்' என்ற வார்த்தைகளைப் பிரயோகிக்குமாறு இங்கிலாந்து, காமன்வெல்த் அங்கத்துவ நாடுகளைக் கேட்டிருக்கிறது.

வெளிநாடுகளிலிருக்கும் இலங்கை ஸ்தானிகர்களுக்கு, பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சு அனுப்பிவைத்த குறிப்பில் இப்படிக் கண்டிருக்கிறது.



## பாம்பு தீண்டி பெண் மரணம்

மன்னார், வியாழன்

சுமார் 55 வயதுடைய ஒரு பெண் கரடிக்குழி எனும் இடத்தில் அரவந்தீண்டி உயிரிழந்தாள்.

பெண் நித்திரை செய்து கொண்டிருந்தபோது அவரது இடது கன்னத்தில் பாம்பு கொத்தியதாம். நித்திரைத் தூக்கத்தில் அவள் புரண்டு படுத்தபோது வலது பக்கத்தில் தீண்டியதாம். விழித்தெழுந்த பெண் பாம்பைக் கண்டதும் கூச்சலிட்டாள். சத்தங் கேட்டு ஓடிவந்தவர்கள் அவரைப் பேசாலைக்கு எடுத்துச் சென்றனர்.

காலை 4 மணியளவில் பாம்பின் விஷத்துக்கு அப்பெண் பலியானாள்.

## தற்காலிக மந்திரி

கொழும்பு, வெள்ளி

வெளிநாடு சென்றுள்ள போக்குவரத்து மராமத்து மந்திரி திரு. பி. பி. ஜீ. கலுகல்ல நாடு திரும்பும் வரை பார்லிமெண்டரிக் காரியதரிசி திரு. டி. பி. தென்னக்கூன் தற்காலிக மந்திரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.


10,000,000 மக்களும் விரும்பி வாங்குவன!
இலங்கை முழுவதும் புகழ் பரப்புவன!
எவை?

டொலர்

ALUMINIUM INDUSTRIES (CEYLON) LTD.
ONE DOLLAR
DOLLAR BRAND

பவுண் அடையாளம் உள்ள
அலுமினியப் பாத்திரங்களே!
ஏன்?

டொலர் அலுமினியம் மாற்று உயர்ந்தது சுத்தம் உள்ளது!
டொலர் அலுமினியம் அழகு அமைப்பு கண்கவர்ச்சி உள்ளது!!
டொலர் அலுமினியம் உறுதி உழைப்பு உத்தரவாதம் உள்ளது!!!

எல்லாவற்றிற்கும் மேல்
உங்கள் தாய்ப் பொன்னாட்டில் மாவிட்டபுரத்தில் நவீன முறையில் செய்யப்படுவது!

டொலர் பவுணை பார்த்து வாங்குங்கள்
எங்கும் கிடைக்கும்
டொலர் மாத்திரமே
உத்தரவாதமானது!

தயாரிக்குமிடம்:
அலுமினியம் இன்டஸ்ட்ரீஸ் லிமி.,
மாவிட்டபுரம். யாழ்ப்பாணம்.
J. D. 3


## ஆஸ்பத்திரி சுவீப் முடிவுகள்

ஆஸ்பத்திரி சுவீப் சபையின் 157வது சுவீப் இழுப்பு நேற்று முன் தினம் நடைபெற்றது. வெற்றி முடிவுகள் வருமாறு:

முதலாவது பரிசு:
01 J 0816 — ரூ. 69,300

இரண்டாவது பரிசு:
06 G 0317 — ரூ. 34,650

மூன்றாவது பரிசு:
20 D 0404 — ரூ. 17,325

ஆளுக்கு 693ரூபாய் கொண்ட 25 மற்றைய பரிசுகளின் எண் விபரங்கள் வருமாறு:

| | |
|---|---|
| 21 C 0738 | 07 C 0237 |
| 14 H 0246 | 02 B 0538 |
| 10 B 0978 | 11 A 0135 |
| 14 O 0073 | 03 H 0252 |
| 02 B 0712 | 05 N 0841 |
| 12 B 0696 | 08 Y 0805 |
| 04 V 0928 | 10 X 0785 |
| 02 M 0858 | 03 R 0960 |
| 12 N 0090 | 05 L 0499 |
| 02 P 0919 | 3 K 0186 |
| 05 L 0682 | 04 V 0787 |
| 05 R 0131 | 19 J 0038 |
| 20 L 0164 | |

## பஞ்சாபிசுபா பிரச்சினை

### சாஸ்திரி-பாட்டியாலா மகாராஜா சந்திப்பு

புதுடில்லி, செப். 8

பஞ்சாபி சுபா கோரிக்கைக்காக சாகும் வரை உண்ணாவிரதமிருக்கும் அகாலிடால் தலைவர் மாஸ்டர் தாராசிங் நிலைமை சம்பந்தமாக ஒரு சமரசத்துக்கு முயற்சி செய்யுமுகமாக பட்டியாலா மகாராஜாவும் மௌலி சந்திர சர்மாவும் நேற்று இந்திய உள்நாட்டு மந்திரி திரு. லால்பகதூர் சாஸ்திரியை இரண்டு தடவைகள் சந்தித்துப் பேசினர்.

இதன் பின் அகாலிடால் ஸ்தாபனத்தின் சட்ட ஆலோசகருக்கு பாட்டியாலாமகாராஜா செய்தி அனுப்பி வரவழைத்தார்.

அமிர்தசரஸ் குருத்துவார ஆலயத்திலிருந்து மாஸ்டர் தாராசிங்கையும் சன்பத்தேசிங்கையும் வெளியேற்றும்படி சிரோமணி குருத்துவார பிரபந்த கமிட்டியை ராஜ்ய அரசாங்கம் கேட்டுள்ளது. இது பற்றி கமிட்டி பரிசீலனை செய்வதாகத் தெரிவிக்கப்பட்டது. மாஸ்டர் தாராசிங்கையும் சன்பத்தேசிங்கையும் ஆலயத்திலிருந்து வெளியேற்றுவதென்ற பேச்சுக்கே இடமில்லையென்று கமிட்டி அங்கத்தவர் ஒருவர் கூறினர்.

# "இரு பிரிவினரும் ஒன்று சேர்ந்து வாழவேண்டும்"

—நீதிபதி

## கீரிமலை வழக்கில் எதிரிகள் விடுதலை

மாவிட்டபுரம், வெள்ளி

"நீங்கள் இருபகுதியினரும் இரு பிரிவைச் சேர்ந்தவர்கள். நீங்கள் இனிமேலாவது ஒரு வேறுபாடும் இல்லாமல் ஒற்றுமையாக வாழவேண்டும். அதுவே என்னுடைய விருப்பம். இவ்வழக்கில் கூறப்பட்ட சாட்சியங்கள் வழக்கைச் சரியான முறையில் நிரூபிக்கத் தவறிவிட்டன. இதன் காரணமாக ஆறு எதிரிகளையும் விடுதலை செய்கிறேன். ஆனால் இதையொரு வெற்றியெனக் கருதி எதிரிகள் வழக்காளிகளுக்கு தொந்தரவு கொடுக்கக் கூடாது என்று எச்சரிக்கை செய்கிறேன்." இவ்வாறு மல்லாகம் நீதிபதி திரு. வெல்லிடி. தாமோதரம் ஒரு வழக்கில் தீர்ப்பு அளிக்கையில் குறிப்பிட்டார்.

கீரிமலையைச் சேர்ந்த வைரமுத்து இளையகுட்டி இராசா, இளையகுட்டி நரசிங்கம், கந்தக்குட்டிமுருகேசு, சின்னையாவின் மனைவி சின்னம்மா, தர்மலிங்கம் கேசவன் ஆகிய ஆறு பேரும் சட்டவிரோதமாகக் கூடியதாகவும் கத்தி, பொல்லு' கல் ஆகியவற்றால் நாகலிங்கம் விசுவலிங்கம், நாகலிங்கம் கனகரத்தினம், நாகலிங்கத்தின் மனைவி பொன்னு, பொன்னையா அருணைசலம், கனகராசா செல்வராசாஆகியோரைத்தாக்கிக் காயம் விளைவித்ததாகவும் குற்றம் சாட்டி காங்கேசன் துறைப் பொலிசாரால் மல்லாகம் நீதிமன்றத்தில் இவ் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

நாகலிங்கம் நடராசா என்பவர் சாட்சியம் அளிக்கையில் இவ்வருடம் ஏப்ரல் மாதம் 19-ந் திகதி தானும் தனது சகோதரர்களான விசுவலிங்கம், கனகரத்தினமும் தங்கள் வீட்டுக் குசினியை வேய்ந்து கொண்டிருந்ததாயும் அப்பொழுது 1-ம், 2-ம், 3-ம் 4-ம், 6-ம் எதிரிகள் அங்கு வந்ததாயும் 1-ம் எதிரி தனது தமையனை விசுவலிங்கத்தைக் கத்தியால் வெட்டியதாயும் அப்பொழுது தான் அதைத் தடுக்கச் சென்றபோது, தன்னையும் 1-ம் எதிரி கத்தியால் வெட்டியதாயும் கூறினர்.

1-ம் எதிரி கத்தியும் 2-ம் எதிரி வாளும் 3-ம் எதிரி கல்லும் 4-ம் 6-ம், எதிரிகள் பொல்லும் வைத்திருந்ததைத் தான் கண்டதாகவும் விசுவலிங்கம் நடராசா தனது சாட்சியத்தில் கூறினர். சாட்சியம் சரியான முறையில் நிரூபிக்கப்படாததால் நீதிபதி ஆறு எதிரிகளையும் விடுதலை செய்தார்.

திரு. ஆர். ஜே. செல்வரத்தினத்தின் அனுசரணையுடன் திருவாளர்கள் டி. தம்பிரத்தினம, திசா. விஜயரத்ன ஆகியோர் எதிரிகள் தரப்பில் ஆஜரானர்கள். காங்கேசன் துறைப் பொலிசாரின் அனுசரணையுடன் திரு. ஆர். கண்ணுத்துரை வழக்கை நடத்தினர்.

## கடற்படை விவகாரம்

கொழும்பு, வெள்ளி

1960-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்துக்கும் ஒக்டோபர் மாதத்துக்குமிடையில் தூர கிழக்கு நாடுகளுக்குச் சென்று திரும்பிய இலங்கைக் கடற்படையைச் சேர்ந்த 'மகாசேன' 'பராக்கிரமா' என்ற இரு கப்பல்களும் சில பொருள்களைக் கள்ளத்தனமாகக் கடத்தி வந்ததாகக் கூறப்பட்ட குற்றச்சாட்டுக்கள் பற்றி ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட சபையின் காரியதரிசியாக திரு. கே. சமரசிங்கா ஸி. ஸி. எஸ். நியமிக்கப்பட்டுள்ளார்.


## உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்ளடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணநந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## தேவை

ஹோட்டல் நடத்த அனுபவம் வாய்ந்த மனேச்சர் உடனே தேவை. பிணைப்பணத்துடன் நேரில் வந்து மனுச்செய்யவும். அத்துடன் நல்ல சமையல் செய்யத் தெரிந்தவரும் தேவை. நேரில் வந்து காணவும். மு. துரைச்சாமி, ஸ்டேசன் ரோட், சுன்னைகம்.

## விற்பனைக்கு

மரம் வெட்டும் மெஷின் 30" வாளுடன் 10 ஹோர்ஸ் பவர் மோட்டர், ஸ்டாற்றர், பெல்ற் முதலியனவுடன் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: சிட்டாடல், நம். 5, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம்.


## திருமண அழைப்பு

### பூபாலசிங்கம் — ஜீவமணி

ச. சின்னத்துரை அவர்களின் மகன் செல்வன் பூபாலசிங்கம் (சிமெந்துத் தொழிற்சாலை,காங்கேசன்துறை) அவர்களுக்கும், ஸ்ரீமதி அ. தியாகராசா அவர்களின் மகள் செல்வி ஜீவமணி அவர்களுக்கும் 11-9-61 திங்கட்கிழமை மாலை 3மணிக்கும் மேல் 4-30மணி வரையில் வரும் துலாலகின சுபமுகூர்த்தத்தில் திருமணவிழா இனிது நடைபெறும். அவ்வமயம் நண்பர்களும் உறவினர்களும்குடும்பசமேதரராக சமுகந்தந்து மண விழாவைச் சிறப்பித்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

பொற்பதி ரோட், கொக்குவில். இருபாலை ரோட், கோண்டாவில்.

## சந்தேகத்தின்மீது ஐவர் கைது

மாவிட்டபுரம், வியாழன்

மல்லாகத்தைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை கந்தையா என்பவர் இரும்பால் அடித்துக் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து சந்தேகத்தின்பேரில் சுன்னாகப் பொலிஸார் ஏழாலையைச் சேர்ந்த இராமலிங்கம் கனகரத்தினம், செல்லையா இராசதுரை, செல்லையா இரத்தினம், துரையப்பா ஞானசேகரம், இராமலிங்கம் சிவஞானம் ஆகிய ஐவரையும் மல்லாகம் உதவி நீதிபதி திரு. எஸ். இளையதம்பி முன்னிலையில் ஆஜர் செய்தபோது, இவ் வழக்கு நிரந்தர நீதிபதி முன் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும் என்பதற்காக இம்மாதம் 12ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

திருவாளர்கள் டி. தம்பிரத்தினம், வி. செல்லத்துரை ஆகியோர் சந்தேக நபர்கள் சார்பில் ஆஜராகினர்.

## கலை விழா

சுழிபுரம், வெள்ளி

சுழிபுரம் அரசினர் விக்டோரியாக் கல்லூரியில் இன்று சனிக்கிழமை மாலை 6 மணி தொடக்கம் இலக்கியக் கலை விழா நடைபெறும்.


வியாபாரம்பெருக
விளம்பரம்செய்க

மோனரு அன் ரோஸ் பப்படங்கள்

நாவிற்கு ருசியுடன் கைதேர்ந்த தொழிலாளர்களைக் கொண்டு
தனிஉலுந்தில் சுகாதார முறைப்படி தயார் செய்யப்படுவது

MONARA PAPPADAM
TRADE MARK 18502

மோனரு
அன்
ரோஸ்
பப்படங்கள்
மூவர்ண கலர்
லேபிளுடன்
மயில் – ரோஸ்
அடையாள மிட்டு

ROSE FLOWER BRAND BEST PAPPADAM
REGD. TRADE MARK No 18255
A. M. BUHARI.
255 5th CROSS ST., COLOMBO.

இலங்கையில் எல்லா இடங்களிலும் விற்பனையாகிறது.

தயாரிப்பவர்கள்:
ஏ. எம். புகாரி அன் கோ
99, நாலாம் குறுக்குத் தெரு,
கொழும்பு.

சுகாதாரத்திற்கு சுவையான ஆகாரத்திற்கு

## தாமோதர விலாஸ்

சொந்தக்காரர்: P. A. நடேசபிள்ளை
239, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

சுவையான ஆகாரங்களா....
சுத்த பசும்பால் குளிர்பானங்களா...
சுகாதார சைவ போசனமா...

தேவைகளுக்கு உடன் விஜயம் செய்யுங்கள்

விசேட ஆடர்கள் உடன் கவனிக்கப்பெறும்.

## சினிமாஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் உன்னத திரை ஓவியம்

வெற்றிகரமான 2வதுவாரம்

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)
நவா (சொம்பனித்தெரு) கெப்பிட்டல் (ஆமர் வீதி கொழும்பு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
ஸ்ரீகிருஷ்ணா (திருகோணமலை) விஜிதா (மன்கேலியா)
மொடர்ன் (பதுளை) விஜயா (மட்டக்களப்பு)
லக்ஷ்மி (இரத்தினபுரி) தீவொளி (நுவரேலியா)



சிவாஜி கணேசன்,
ஜெமினி கணேசன்,
எம். ஆர். ராதா,
எஸ். வி. சுப்பையா, சாவித்திரி
நடித்த

## பாவ மன்னிப்பு

இதயத்தைத் தொடும் கீதங்கள்!
உள்ளத்தை உருக்கும் சம்பவங்கள்!
கண்ணைக் கவரும் காட்சிகள்!

காணத்தவருதீர்கள்!

எல்லோரும் குடும்பத்துடன் பார்த்து மகிழவேண்டிய படம்.

இப்பொழுது திரையிடப்படுகிறது!

மனோஹரா (யாழ்ப்பாணம்)

தினசரி மாலை 6-30க்கும் இரவு 9-30க்கும்
சனி, ஞாயிறு பிற்பகல் 2-30க்கு மெற்னி
ஜெமினி கணேசன், பி. சரோஜாதேவி
நடித்த

## கைராசி

# வீதிகளில் துப்பாதீர்கள்!

## யாழ்ப்பாண மாநகரசபையின் கோரிக்கை

யாழ்ப்பாணம், சனி

வீதிகள், நடைபாதைகள், பகிரங்கக் கட்டடங்கள் போன்ற இடங்களில் பொதுமக்கள் காறியுமிழ்தல் துப்புதல் ஆகியவற்றைத் தடை செய்ய யாழ்ப்பாணம் மாநகரசபை நடவடிக்கை எடுக்கவிருக்கிறது.

இப்படியான இடங்களில் துப்புவதோ காறியுமிழ்வதோ கூடாதெனப் பொதுமக்களைக் கேட்டுக்கொள்ளும் அறிவுரைகள் நிரம்பிய துண்டுப்பிரசுரங்களை வினியோகிக்கவும் ஏற்பாடாகவிருக்கிறது. இதற்குப் போதிய பலன் கிடைக்காதவிடத்து சட்டரீதியாக இதனைத் தடைசெய்ய சட்டமியற்றப்படலாமெனவும் தெரிகிறது.

இவ் விஷயம் கடந்த நிதிக் கமிட்டிக் கூட்டத்தில் ஆரரயப்பட்டபோது முதல் நடவடிக்கையாகத் துண்டுப் பிரசுரம் வினியோகிப்பதெனவும், அதற்கு மதிப்பளிக்கப்படாவிடின் சட்டமியற்றிச் சட்ட நடவடிக்கை எடுப்பதெனவும் சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

ஸ்ரீ லங்கா சாகித்திய தினம் கொண்டாடுவது சம்பந்தமாக ஸ்தலஸ்தாபன கமிஷனரின் கடிதம் பரிசீலிக்கப்பட்டபோது போதிய அவகாசம் இல்லாமையாலும், சபையின் நெருக்கடியான நிதிநிலைமை காரணமாகவும் அத்தினத்தைக் கொண்டாட இணக்கம் தெரிவிப்பதில்லை யெனச் சிபார்சு செய்யப்பட்டது.

மாநகரசபைக் காவற்காரர், கடமையின்போது அணிவதற்கு இரண்டு கோட்டுகள் கொடுப்பதற்கும் நிதிக் கமிட்டி தனது சிபார்சை அளித்துள்ளது.

உள்ளூர் கடன் அபிவிருத்தி நிதிக் காரியதரிசியிடமிருந்து மேற்கொண்டும் ரூ.1,000,000.00 கடனைப் பெறுவதற்கு அங்கீகாரம் அளிப்பதென் முடிவு செய்யப்பட்டது. இக் கடன் 40 வருடகாலத்துக்குள் திருப்பிக் கட்டுப்படுதல் வேண்டும்.

சோலைவரியை உயர்த்தும் சோலைவரியை உயர்த்தும் நிதிநிலைமையை விளக்கும் துண்டுப்பிரசுரங்களை வினியோகிக்கும்பொருட்டு முன்னர் பெறப்பட்ட கடன்தொகை தண்ணீர் வினியோகத்துக்காகப் பெறப்பட்ட கடன்தொகை ஆகிய விபரங்களை அடக்கிய அறிக்கையொன்றினைத் திரும்பவும் சமர்ப்பிக்குமாறு கணக்காளரைக் கேட்டுக்கொள்ளப்பட வேண்டுமென இக் கமிட்டி முடிவு செய்திருக்கிறது.

## கொழும்புத்துறை இறங்குதுறை

யாழ்ப்பாணம், வெள்ளி

எழுபதாயிரம் ரூபாய் செலவில் யாழ்ப்பாணம் கொழும்புத்துறையில் உள்ள இறங்குதுறையை விஸ்தரிக்கும் வேலைகளை மராமத்து இலாகா மேற்கொண்டுள்ளது. போக்குவரத்து மந்திரி திரு. பி. பி. ஜி. கலுகல்லை கொழும்புத் துறையில் இப்போதுள்ள இறங்குதுறை சீர் கேடான நிலையில் இருப்பதாகப் பார்லிமெண்டில் கூறினர். "இறங்கு துறையில் கடல் நீரைத் தடை செய்யும் மதில்கள் சேதமுற்று அழிந்துபோகும் நிலையில் உள்ளன ஆகையால் வள்ளங்கள் போவதற்கும் பொருள்களை இறக்குவதற்கும் சிரமம் உண்டு. இறங்கு துறையின் மற்றைய கரைக்கடல் போதிய ஆழமில்லாததால் பெரிய வள்ளங்கள் கோடை காலத்தில் துறைமுகத்தை அடைய முடியாது. எனவேதான் இறங்குதுறையை விஸ்தரிக்கும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன." என்று மந்திரி மேலும் கூறினர்.

## யூனியனையும் கலந்தாலோசிக்கவும் மேலதிகாரிகளுக்கு யோசனை

யாழ்ப்பாணம், சனி

உணவு உற்பத்தி மேற்பார்வையாளர்களை இடமாற்றம் செய்யும்போது யூனியன் பிரதிநிதிகளையும் கலந்து ஆலோசித்தே செய்யப்பட வேண்டுமென்று மேலதிகாரிகளைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்று வடமாகாண உணவு உற்பத்தி மேற்பார்வையாளர் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மன்னர் அர்ச். சவேரியார் கல்லூரி மண்டபத்தில் அரு. ஆ வேலுப்பிள்ளை தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது. யாழ்ப்பாணம், வவனியா, மன்னர் ஆகிய இடங்களைச்சேர்ந்த உணவு உற்பத்தி மேற்பார்வையாரர்கள் இதில் கலந்துகொண்டனர்.

உணவு உற்பத்தி மேற்பார்வையாளர்களுக்குக் காணி வழங்கும் விஷயமாக நிரந்தரமான அரசாங்கஅதிபர் வந்ததும் பேட்டி காண்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

யாழ்ப்பாணமாவட்ட விவசாய விஸ்தரிப்பு நிலைய நிருவாகம்பற்றி மேலதிகாரிகளுக்கு முறையிடுவதென்ற தீர்மானமும் வேறு சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

மன்னர் மாவட்ட விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தர் திரு. எஸ். நடேசன் பேசும்போது, நாட்டின் பொருளாதாரத்தை வளம்படுத்த இந்த யூனியன் ஒத்துழைக்கவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

பின்னர் நடைபெற்ற உத்தியோகத்தர் தேர்வின்போது திரு. ஆ. வேலுப்பிள்ளை தலைவராகவும், திரு. யோ. பிரான்சிஸ்குரூஸ் உப தலைவராகவும், திரு. க. சுப்பிரமணியம் காரியதரிசியாகவும், திரு. கே. தியாகராசா உப காரியதரிசியாகவும், திரு. வ. வேலுப்பிள்ளை பொருளாளராகவும், திருவாளர்கள் எஸ். கந்தப்பிள்ளை, பிரான்சிஸ் பீரிஸ், பொ. இளையதம்பி, எம். கந்தப்பு, மு. கணபதிப்பிள்ளை, செ. தேவராசா, பீ. ஏ. குரூஸ, ந. முத்துக்குமாரு, எஸ். பாலசிங்கம், எஸ். பத்மநாதன் ஆகியோர் நிர்வாக சபை அங்கத்தவர்களாகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று தோன்றியது.

பேராசிரியர் இலங்கைக்கு வந்திருப்பது, இந்நாடு செய்த புண்ணியமென்றே கூற வேண்டும். அவரை கொழும்புக்கே ஏகபோக உரிமையாக விட்டுவிடாமல், யாழ்ப்பாணம் முதலிய வேறு பல பகுதிகளுக்கும் அவரை அழைத்து, பயன் பெறவேண்டும்.

# காலஞ்சென்ற வழக்கறிஞருக்கு கோர்ட் அனுதாபம்

யாழ்ப்பாணம், வெள்ளி

மாவட்ட நீதிபதி திரு. என். கிருஷ்ணதாசன், கூட்டு மாவட்ட நீதிபதி திரு. எஸ். தனபாலசிங்கம் ஆகியோர் இன்று காலை நீதிமன்றத்தில் கூடியபோது, முடிக்குரிய வழக்கறிஞர் திரு. டி. முத்துசாமிபிள்ளை, காலஞ்சென்ற முடிக்குரிய வழக்கறிஞர் திரு. எம். ஆர். காராளசிங்கம் மரணம் சம்பந்தமாக பின்வருமாறு குறிப்பிட்டார்:

"இன்றைய வேலைகளை ஆரம்பிக்குமுன்னர், இந்தக் கோர்ட்டின் முடிக்குரிய வழக்கறிஞராயிருந்த திரு. எம். ஆர். காராளசிங்கத்தின் மரணத்துக்கு அனுதாபம் தெரிவிப்பது எனது முக்கிய கடமையாகும்".

அவர் தொடர்ந்து பேசியதாவது: "நேற்றுப்பிற்பகல் திரு. காராளசிங்கம் மரணமான செய்தி எங்களுக்கெல்லாம் பெரிய அதிர்ச்சியைக் கொடுத்தது. சில மாதங்களுக்கு முன்னர்தான் அவர் முடிக்குரிய வழக்கறிஞராக நியமனம் பெற்ருர். மாஜிஸ்திரேட் லீவில் சென்றிருந்த சமயங்களில், திரு. காராளசிங்கம், திருப்திகரமான முறையில் மாஜிஸ்திரேட்டாக கடமையாற்றினர்."

"சுதுமலையில் வைதிகமான இந்துக்குடும்பமொன்றில் பிறந்த அவர், ஆரம்பகாலத்தில் மானிப்பாய் இந்துக்கல்லூரியிலும், பரமேஸ்வரா கல்லூரியிலும் கல்வி பயின்ருர். பிரபலமான வைத்தியர் முத்துக்குமாரின் மகளை அவர் விவாகம் செய்தார். ஆரம்ப வாழ்க்கையில் வங்கியில் ஒரு குமாஸ்தாவாக இருந்த அவர், சட்டத்துறையில் ஆர்வம்கொண்டு பின்னர் புறக்டராகவும் கடமையாற்றினர். 1939-ம் ஆண்டு வழக்கறிஞராகச் சேர்ந்த அவர் தமது 54-வது வயதில் இறைவனடியைச் சேர்ந்துவிட்டார்."

"யாருக்கும் தெரிந்தோ தெரியாமலோ குற்றம்புரியாத திரு. காரளசிங்கத்தை பலரும் மனதார விரும்பினர். யுத்தகாலத்தில் அதாவது கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பமான சமயத்தில் அவர் ஏகமனதாக அதன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். கல்வி சம்பந்தமானவைகளிலும், முக்கியமாக பாடசாலைகள் அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட சமயம் அதில் அவர் மிகுந்த அக்கறைகாட்டினர். வைத்தீஸ்வர வித்தியாலயத்தின் நிர்வாக கமிட்டியிலும் அவர் அங்கம் வகித்தார். நான் முன்னர் கூறியதுபோல் பிரபல்யமான வைத்தியர் முத்துக்குமாரின் மகளான அவரின் மனைவியும், மகள் இருவரையும் ஒரு மகனையும் அவர் விட்டுப்பிரிந்துவிட்டார்.

அவரின் மரணத்துக்கு ஒரு நிமிட அனுதாபம் தெரிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்"

மாவட்ட நீதிபதி திரு. என். கிருஷ்ணதாசன் பேசுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார். 'தனது சமூகத்துக்கு முக்கியமாகத் தேவைப்பட்ட ஒருவர் மரணமாகிவிட்டார்.

இந்நாட்டின் அரசியல் வாழ்க்கையில் பங்கெடுத்து தனது ஆர்வத்தைத் தெரிவித்த ஒருவர் இன்று மறைந்துவிட்டார். திரு. காராளசிங்கம் தமது கட்சிக்காரர்களுடன் மட்டுமின்றி தம்மைத் தேடி வருபவர்களுடனும் அன்பாய் இருந்தார். சமூக சேவைகளிலும் முக்கிய பங்கெடுத்தார். திரு. காரளசிங்கத்தின் மரணத்துக்கு அனுதாபம் தெரிவிக்கும் பொருட்டு கோர்ட் இன்று ஒரு நேரத்துடன் முடிவடையும்."

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.